# யூலை- 25 - செவ்வாய்

## திருத்தூதர் யாகப்பர் (ஜேம்ஸ்)

## இறை இயேசுவைப்போன்று தாழ்ச்சியோடு வாழ்வோம்.

### முதல் வாசகம் : 2 கொரிந்தியர் 4 : 7 – 15

சகோதர சகோதரிகளே! இந்தச் செல்வத்தை மண்பாண்டங்கள் போன்ற நாங்கள் கொண்டிருக்கிறோம். இந்த ஈடு இணையற்ற வல்லமை எங்களிடமிருந்து வரவில்லை, அது கடவுளுக்குகே உரியது என்பது இதிலிருந்து விளங்குகிறது.நாங்கள் எல்லாச் சூழ்நிலைகளிலும் இன்னலுற்றாலும் மனம் உடைந்து போவதில்லை. குழப்பமுற்றாலும் நம்பிக்கை இழப்பதில்லை. துன்புறுத்தப்பட்டாலும் கைவிடப்படுவதில்லை் வீழ்த்தப்பட்டாலும் அழிந்துபோவதில்லை. இயேசுவின் வாழ்வே எங்கள் உடலில் வெளிப்படுமாறு நாங்கள் எங்குச் சென்றாலும் அவருடைய சாவுக்குரிய துன்பங்களை எங்கள் உடலில் சுமந்து செல்கிறோம்.இயேசுவின் வாழ்வு சாவுக்குரிய எங்கள் உடலில் வெளிப்படுமாறு உயிரோடிருக்கும்போதே நாங்கள் அவரை முன்னிட்டு எந்நேரமும் சாவின் வாயிலில் நின்று கொண்டிருக்கிறோம்.சாவின் ஆற்றல் எங்களிலும் வாழ்வின் ஆற்றல் உங்களிலும் வெளிப்படுகிறது.”நான் கடவுள்மீது நம்பிக்கையோடு இருந்தேன் ஆகவே பேசினேன்” என்று மறைநூலில் எழுதியுள்ளது. அதற்கொப்ப நம்பிக்கை மனப்பான்மை கொண்டுள்ள நாங்களும் நம்புகிறோம் ஆகவே பேசுகிறோம்.ஆண்டவர் இயேசுவை உயிர்த்தெழச் செய்த கடவுளே எங்களையும் அவரோடு உயிர்த்தெழச் செய்து அவர் திருமுன் நிறுத்துவார் உங்களையும் அவ்வாறே நிறுத்துவார் என்பது எங்களுக்குத் தெரியும்.இவையனைத்தும் உங்கள் நன்மைக்கே நிகழ்கின்றன. இறையருள் பெறுவோரின் தொகை பெருகப்பெருக அவர்கள் கடவுளுக்குச் செலுத்தும் நன்றியும் பெருகும். இதனால் கடவுள் போற்றிப் புகழப்படுவார்.

**பதில்பாடல் :** கண்ணீரோடு விதைப்பவர்கள் அக்களிப்போடு அறுவடை செய்வார்கள்.

### நற்செய்தி : மத்தேயு 20 : 20 – 28

அக்காலத்தில் செபதேயுவின் மனைவி தம் மக்களோடு ஒரு வேண்டுகோள் விடுக்குமாறு இயேசுவிடம் வந்து பணிந்து நின்றார்.”உமக்கு என்ன வேண்டும்?” என்று இயேசு அவரிடம் கேட்டார். அவர், ”நீர் ஆட்சி புரியும்போது என் மக்களாகிய இவர்கள் இருவருள் ஒருவன் உமது அரியணையின் வலப்புறமும் இன்னொருவன் இடப்புறமும் அமரச் செய்யும்” என்று வேண்டினார்.அதற்கு இயேசு, ”நீங்கள் என்ன கேட்கிறீர்கள் என உங்களுக்குத் தெரியவில்லை. நான் குடிக்கப்போகும் துன்பக் கிண்ணத்தில் உங்களால் குடிக்க இயலுமா?” என்று கேட்டார். அவர்கள் ”எங்களால் இயலும்” என்றார்கள்.அவர் அவர்களை நோக்கி, ”ஆம், என் கிண்ணத்தில் நீங்கள் குடிப்பீர்கள். ஆனால் என் வலப்புறத்திலும் இடப்புறத்திலும் அமரும்படி அருளுவதோ எனது செயல் அல்ல. மாறாகஇ அவ்விடங்களை என் தந்தை யாருக்கு ஏற்பாடு செய்திருக்கிறாரோ அவர்களுக்கே அவை அருளப்படும்” என்றார்.இதைக் கேட்டுக்கொண்டிருந்த பத்துப்பேரும் அச்சகோதரர் இருவர் மீதும் கோபங்கொண்டனர்.இயேசு அவர்களை வரவழைத்து, ”பிற இனத்தவரின் தலைவர்கள் மக்களை அடக்கி ஆளுகிறார்கள். உயர்குடி மக்கள் அவர்கள்மீது தங்கள் அதிகாரத்தைக் காட்டுகிறார்கள் இதை நீங்கள் அறிவீர்கள்.உங்களிடையே அப்படி இருக்கக்கூடாது. உங்களுள் பெரியவராக இருக்கு விரும்புகிறவர் உங்கள் தொண்டராய் இருக்கட்டும்.உங்களுள் முதன்மையானவராக இருக்க விரும்புகிறவர் உங்களுக்குப் பணியாளராக இருக்கட்டும்.இவ்வாறே மானிட மகனும் தொண்டு ஏற்பதற்கு அல்ல, தொண்டு ஆற்றுவதற்கும் பலருடைய மீட்புக்கு ஈடாக தம் உயிரைக் கொடுப்பதற்கும் வந்தார்” என்று கூறினார்.

**தியானம்:** ”உங்களுக்குள் முதன்மையாக இருக்க விரும்புகின்றவர் உங்களுக்குப் பணியாளராக இருக்கட்டும் ” என்ற வார்த்தையின் படி இயேசு தனது வாழ்வில் சீடர்களின் பாதங்களை கழுவுவது வீட்டில் இருக்கும் அடிமைகள் செய்கின்ற வேலையாகும். அவ்வேலையை ஆண்டவர் செய்கிறார் என்றால் அவருடைய சீடர்களாக, அவருடைய மக்களாக வாழ்கின்ற நாம் அவரை விட பெரியவர்கள் அல்ல என மனப்பான்மையோடு வாழ வேண்டும். நாம் தாழ்ச்சியோடு வாழும் போது மேலும் மேலும் உயர்வடைவோம் என்பது தான் ஆழமான உண்மையாக இருக்கிறது. அன்னை மரியா ஆண்டவரின் தாயாக உயர்வதற்கும், ஆண்டவர் இயேசு எல்லாப்பேரிலும் மேலான பேரை அடைவதற்கும் அவர்களுடைய தாழ்ச்சியே அன்றி வேறொன்றும் இருக்க முடியாது. ஆகவே நாம் ஒவ்வொருவரும் உள்ளத்தில் தாழ்ச்சியைக் கொண்டு வாழ வேண்டும். ஆகவே இயேசுவின் சீடர்களாகிய நாம் இயேசுவிடம் இருந்த அதே தாழ்ச்சியோடு பணி செய்வோம். அதன்வழியாக இறை அருள் நிறைவாகப் பெறுவோம்